

க. சட்டநாதன்

# துயரம் தரும் அழகு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

14049 CC
269804

# துயரம் தரும் அழகு

க.சட்டநாதன்

289805 CC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

894.8111

துயரம் தரும் அழகு / கவிதை/ க.சட்டநாதன், 21, சட்டநாதர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்/ முதற் பதிப்பு: வைகாசி 2019 / © க.சட்டநாதன்/ அட்டைப்பட வடிவமைப்பு: க.பரணீதரன்/வெளியீடு: ஜீவநதி, கலைஅகம், அல்வாய்/ பக்கம்: 104/ விலை:300.00/அச்சுப்பதிப்பு: பரணீ அச்சகம், நெல்லியடி.

Thuyaram Tharum Azhaku/ collection of Poems/ K.Saddanathan, 21, saddanathar Road, Nallur, Jaffna/ First Edition : May 2019/ © K.Saddanathan/ Cover Designed by K.Bharaneetharan/ Published by Jeevanathy, Kalaiaham, Alvai/ Pages:104/ Price 300.00/ Printed at Baranee Printers, Nelliady.

ISBN : 978-955-4676-97-8

ஜீவநதி வெளியீடு – 125



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது மருமக்கள்

இந்து

பாபு

சீனு

ஜெய்

ஶ்ரீலட்சுமி

ஆகியோர்க்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றி

- தி.செல்வமனோகரன்
- ந.சத்தியபாலன்
- க.பரணீதரன்
- ஜீவநதி
- பரணீ அச்சகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01 / உள்ளொளி
02/ இதுவம் அதுவும்
03/ மனசு
04/ பயம்
06/ உரிமை
09/ காதற் கிழவன்
12/ தேன்
13/ விதியின் நிழல்
15/ மறைந்து போனவன்
16/ விசாரம்
18/ நீக்கம்
21/ அட்டி ஏதும் இல்லை
24/ பெயர்ச்சி
28/ ஓர உணர்வுகள்
31/ உதிருமா
33/ பயணவேளை
38/ உதவி
39/ மாய மந்திரங்கள்
42/ தனியன்
43/ பக்தி
45/ தளும்பி வழியும்
47/ இளமை
49/ கை வண்ணம்
52/ அதிசயம்
54/ புலன்களின் பாடல்
55/ துயரம்
56/ இருளின் உயிர்ப்பு
58/ திசை மயக்கம்
60/ பேருருவம்
61/ வாழ்க்கை
63/ புரிதல்
65/ சுவை
67/ கருமை
70/ ரசத் துளிகள்
72/ பெரிய சுகம்
74/ சொரிவு
75/ தித்திப்பு
76/ மூச்சு முட்டுதல்
77/ சித்திரம்
79/ விரிவு
80/ விரகம்
81/ அலை
82/ துயரம் தரும் அழகு
83/ எதனால்
84/ தெரிவது எது?
85/ உறவு
86/ உருவம்
88/ முடியும்
91/ அன்பு செய்
94/ ஒற்றை மலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

ஜீவநதியின் 125 ஆவது வெளியீடாக ஈழத்தின் பிரபல எழுத்தாளர் க. சட்டநாதனின் 'துயரம் தரும் அழகு' கவிதைத் தொகுதி வெளி வருகின்றது. ஈழத்து இலக்கிய வெளியில் க. சட்டநாதனின் சிறுகதைகள் ஏற்படுத்திய தாக்கம் - மாற்றம் அளப்பரியது. சிறுகதை, நாவல், கட்டுரை, விமர்சனம், சினிமா என இலக்கியத்தின் பல் வகைமைகளிலும் ஆழ தன் கால்களைப் பதித்து வரும் க. சட்டநாதனின் 2 ஆவது கவிதைத் தொகுதி இது. முதற் தொகுப்பு 'நீரின் நிறம்' வடமாகாண சாஹித்ய விருதை 2017 இல் பெற்றுக் கொண்டதும் இவ்விடத்திற் குறிப்பிடற்பாலது.

க.சட்டநாதனின் மனதில் உதித்த உணர்வுகளை சுவை சொட்டக் கவிதையாக்கி, வாசகர்களுக்கு இத்தொகுப்பு மூலம் தந்துள்ளார். இரசனை மிக்க மொழியும், விஞ்ஞான ரீதியான கருத்தியல்களும், உணர்வுகளின் கிளறல்களுக்கு வழி சமைக்கும் சுவை மிகு மொழியும் இத்தொகுப்பிற்கு வளம் சேர்க்கின்றன. க.சட்டநாதன் அவர்கள் தொடர்ந்து இலக்கிய உலகில் பயணிக்க இறைவனை வேண்டி அவருக்கு வாழ்த்துக்களையும் தெரிவித்து கொள்கின்றோம்.

வழமை போல இத்தொகுப்பும் வாசகர்களிடையே நன் மதிப்பை பெறும் என்ற நோக்கோடு இத்தொகுப்பை வெளியிட்டு வைக்கின்றோம்.

- க.பரணீதரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துக்க நிவாரணத்தை அவாவும் மனவெளி

எந்தவொரு கலைப்படைப்பும் படைப்பாளியின் அகவுலக சஞ்சாரத்தின் வழியாகவே வெளிப்படுகின்றது. படைப்பாளியின் அகவுரு, வாழ்வியல் அனுபவம், தாபம், கனவு, புலமைத்துவம், சமூகத்தின் மீதும் அதற்குமப்பாலமைவன மீதுமான வாசிப்பு என்பவற்றின்வழி அடுக்கமைவு செய்யப்படும் எண்ணங்கள், தர்க்கவியல் தளத்தில் தத்துவார்த்த வடிவத்தைப் பெறும்போது அது கலையாகிறது. கலை என்பதில் உயர் வானது, தாழ்வானது எனும் பேதமில்லை. இது கலை அது கலையல்ல என்ற கருத்து நிலையே உண்டு. குறித்த வடிவத்தில் அமையும் கலை அதன் வடிவத்தைத் தன்னுள் கரைத்து அரூபமாக்கித் தானே ஸ்தூலமாய் நிற்கும். வெற்று வடிவத்தி னால் மட்டும் அளிக்கை செய்யப்படின் அது கலையாகாது. இதனாலே தான் கலை என்பது எது எனும் விடயம், என்றும் விவாதப்பொருளாக இருந்து வருகின்றது. தாம் நம்பும் வடிவத்தையும் வடிவமற்ற வடிவத்தையும் மட்டுமே கலை எனும் குழு மனவியல் தொடர்ந்தும் கட்டமைந்து வருகின்றது. இதற்கு அப்பால் கலை எப்பொழுதும் தன்னைத் தானே சிருஷ்டித்துக்கொண்டேயிருக்கின்றது. தக்கவை காலத்தால் தம்மைத் தகவமைத்துக்கொள்ள, அல்லாதவை கால வெள்ளத்துள் அள்ளுண்டு போகின்றன.

க. சட்டநாதனின் "துயரம் தரும் அழகு" எனும் இக் கவிதைத்தொகுதி துயரந்தருகின்ற துயரத்துக்கப்பால் அதனுள் ஊறி வெளிப்படும் அழகை இரசிக்கிறது. துயரத்தை இரசனைக் குரியதாக்குகின்றது. தனிமையும் வெறுமையாகிப்போன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வுக்குக் கடந்தகால வாழ்வின் நினைவுகளினூடு ஒத்தடங்கள் கொடுத்து இசைமீட்டுகிறது. துயரிசையில் வழிந்தொழுகும் வாழ்வின் விளிம்பில் ஒட்டி யிருக்கும் நாட்களைக் கடந்து செல்ல மாய யதார்த்தத்தைப் பயன்படுத்துகிறது.

இத்தொகுதியில் ஐம்பது கவிதைகள் உள்ளன. இவரது சிறு கதைகள் போல் ஒற்றைச்சொல்லைத் தலைப்பாகக் கொண்டவையே அநேகம். சூனியப்பெருவெளியின் விரிவினுள் (ப. 79) கிடக்கும் தம் வாழ்வைக் கடந்தகால எண்ணங்களால் நிரப்பப் பல கவிதைகள் முயற்சிக் கின்றன. அகவுலக சஞ்சாரங்களைப் பெரிதும் நிகழ்த்துகின்றன. தம்முள் தாமே சம்பாஷிக்கின்றன. "எழுதித்தீராப் பக்கங்களாய்" ஓய்ந்து விடுகின்றன. மீண்டும் தம் நினைவு முடிச்சுக்களை அவிழ்த்து அவிழ்த்து இதம் தரும் வாழ்வியல் தடங்களைத் தேடித்தேடிக் கிடைத்தவற்றைக்கொண்டு தம்மை ஆசுவாசப்படுத்திக்கொள்கின்றன. இதன்வழி பல கவிதைகள் "தனித் திருக்கும் ஒற்றைப்பறவையின் விரகம் ததும்பி வழியும் தாபலகரி" (ப. 82) களாக வெளிப்படுகின்றன. இருப்பின்மை தொடர்பாக (ப. 83) உரையாடு கின்றன. பெண்ணுடலின்மீது கண்களை எறிந்து அதன்வழி தெவிட்டுதல் இல்லாத பெரிய சுகத்தைக் (ப. 73) காணுகின்றன. தனிமையின் வெறுமை யான "ஆழ்ந்த துயிலற்ற அனந்தல் நிலை" சமூகத்தை நிர்வாணமாகக் காணவைக்கிறது. ஓர் இலக்கியக்கூட்டத்துக்கான செல்லுகையையே கேள்விக்கு உள்ளாக்கும் சப்பாத்துக்கால்களின் ஒலி இதயத்தைப் பதை பதைக்கச்செய்கிறது. இருள் பல இடங்களில் குறியீடாகப் பயன்படுத்தப் படுகிறது. உள்மன யாத்திரையாகப் பல கவிதைகள் அமைந்துள்ள அதே வேளை ஒடுக்கப்பட்ட மக்களைப் பேசும் (ப. 88) கவிதைகளும் உள்ளன.

எளிமை, சொற்சிக்கனம், சொற்செட்டு, வர்ணனை நிறைந்த இக்கவிதைகள் இப் படைப்பாளியின் புனைவுமொழியின்வழி கட்டமைக்கப் பட்டுள்ளன. "எனக்கு இங்கு எதுவுமில்லை என்றாகிய" (ப. 42) வாழ்வின் துயரத்தை, தனக்கேயான "அனுபவ வெண்சூட்டின்" வழி படைப்பாளி தந்து நிற்கின்றார். மாய யதார்த்தவாதப் பண்புடைய கவிதைகளும் யதார்த்தப் பண்பு நிறைந்த கவிதைகளுமாக இவை அமைந்துள்ளன. இத்தொகுப்பில் ஒரு மனிதனின் துயரமும் வாழ்வாகிப்போன துயரத்தை இரசிக்கப் பழகிய படைப்பு மனமும் துயரத்தின் அழகும் வெளிப்பட்டுநிற்கின்றன. படைப் பாளிக்கு என் வாழ்த்துக்கள்.

திருநெல்வேலி
05.04.2019

தி. செல்வமனோகரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளொளி

உள்ளே
இன்னும் உள்ளே,
உட்புகு.
குருத்திருளின்
அடர்த்தி குறைய,
ஒளி ஒரு பொட்டாய்
உள்ளிருக்கும்.
அதைத் தொடும் வரை
இயங்கு.
சடுதியில்
அவ்வொளியின் கூர்படும்.
கூர்படுமிடத்தில்
ஓராயிரம்
பூச்சிதறல்கள்.
பின்,
உச்சத்தில்
நீ பேரொளியுள்
சுருள்வாய்;
சுடர்வாய்;
பின்
நீ அதுவே ஆதல் காண்பாய்.

*2008*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதுவும் அதுவும்

எங்கள் ஊரில் இருந்து
அடுத்த ஊருக்குப் போனேன்.
எங்கள் ஊர் மாதிரித்தான்
அதுவும் இருந்தது
காயங்களோடு...
இன்னும் இடிபாடுகளோடு.

*2008*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனசு

மனசின்
உள்ளே,
உள்ளே தான்
அந்தப் புள்ளி இருந்தது,
சற்று ஒளியுடன்.
தொட்டுப் பார்த்தேன்,
அது
இருந்த இடத்தில்
ஒரு
பூ மலர்ந்தது...!
சில வண்ணத்துப் பூச்சிகளும்
கூட இருந்தன
சிறகடித்த படி...!

*2008*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயம்

இப்படி நான்
எப்பொழுதும் இருந்ததில்லை .

அடிக்கடி
மரண பயம் என்னைத்
தொட்டுத் தொடர்கிறது.

அழகிய மலர்கள்,
பச்சைப் பசும் வயல்கள்,
விரக வலியுடன்
ஒலி எழுப்பும் பறவைகள்,
இளைய பெண்கள் -
அவர்தம் தளிர் உடல்கள்,
உதடுகள்,
கருங்குவளைக் கண்கள்.
மழலை சிந்தும்
பட்டுக் குழந்தைகள்.
ஊர்க் கோயில் அம்மன் சிலையில்
வழியும்
அழகிலெல்லாம்
மரணத்தின் நிழல்கள்,
சாயைகள்.
காலம் கரைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேகமாய் நகர்ந்து விடுகிறது.
முதுமை தொடங்கு முன்னர்,
முகத்திலும் மனதிலும்
களை அகன்றிட
நூறாண்டு காலம் வாழ்ந்த
அலுப்பும் களைப்புமாய்...!

நண்பர்கள்!
பலர் போய் விட்டார்கள்,
இருப்பவர் ஒரு சிலர்.
அதில் நானும் ஒருவன்.
முதுமையின் தளர்ச்சி
படருமுன்னர்,
மரணத்தின் ஆழக் கோடுகள்
அழுத்தமாய்,
இன்னும் அழுத்தமாய்
ஏன்
என்னுள் படர்கிறது?

இப்படி நான்
எப்பொழுதும் இருந்ததில்லை.

*2007*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உரிமை

இன்றுதான் என்றனர்,
எழுந்து நடந்தேன்.
இங்குதான் என்றனர்,
எட்டிப் பார்த்தேன்,
இருட்டாயிருந்தது;

எங்கள் வீட்டு உட்கூடம் மாதிரி
ஓரிடம்.
தலைக்கறுப்புகள் சில தெரிந்தன.
அருகாய் அமர்ந்ததும்
கேட்டேன்:
கூட்டம்...?
நடக்குமாம்...!
தலைவர் பேச்சாளர்...?
வருவினம்...!

நான் சற்றுச் சோர்ந்திருந்த
வேளை,
திமு திமு எனும் சத்தம்.
கனத்த சப்பாத்துக்களின்
தட தட ஒலிகளும்
கூடவே...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காக்கி, பச்சை, சாம்பல், வெள்ளை
என
உடையணிந்த ஆளணி
நுழைந்தது.

இப்படி
அப்படி
அப்படி
இப்படி
என்று
கட்டளை இட்டனர்.
ஏதேதோ எங்களைக் கேட்டு
எழுதிக் கொண்டனர்.
அடையாள அட்டை பார்த்துப்
பதிவு நடந்தது.
என்ன கூட்டம் என்று கேட்டனர்.
ஏதோ மரபுரிமை பற்றியது
என்றதும் -
உரிமை...! உரிமையா...?
உனக்கு வேணுமா?
என்று
என்னை மாறி மாறி உதைத்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் சிலரையும்...

பின்னர்,
தலைவர் வரும் வரை காத்திருந்தனர்.
தலைவருக்கும் உதைவிழும்
என
நான் எதிர் பார்த்திருந்தேன்.

*2013*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காதற் கிழவன்

மலர்ந்தேன்;
அந்த மலர்தலில்
எனது வாசம்
ஊர் முழுவதும்
பரவிய தென்று
ஊர்க்குருவி
சொல்லியது.

இரவு
தளிர்க்குருத்தாய் இருந்த வேளை
அவன்
என்னிடம் வந்தான்.

பல வண்ணக் கொத்து மலர்கள்
அவனது
கையில் இருந்தன.
காம்புடன்
ஒரு மலர் எடுத்து
எனக்குத் தந்தான்.

"மீதிப் பூக்கள்...?"
என்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இன்னும்
பெட்டையள் இருக்கினம்
தர வேணும்...!"
என்றான்.
"இவன்
காதற் கள்வனா...?"

இரவு
நடுச்சாமம்
விடியல் என
என்னருகில்
அவன்
சயனித்திருந்தான்.

சயனித்த வேளை
எனது
முலைக் காம்பு பற்றிக்
கிடந்தான்;
சிறு குழந்தை போல...!

என்ன இது
வெட்கம் கெட்டதனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனத் துணுக்குற்று,
துவண்டு
மறுபக்கம் திரும்பிப் படுத்தேன்.

அவன்
கரைந்து வடிந்து
காணாமல் போனதை
என் கண்களே கண்டன!

*2010*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேன்

முதன் முதலில்
எங்கள் வீட்டுக்கு
அவள் வந்த போது
எனக்கு எட்டுவயது.
அவளுக்கு ஏழு.
ஊரிலுள்ள எல்லாப் பூக்களின்
வண்ண
இதழ்களையும்
வாசத்தையும்
அவற்றின்
உள்ளூறை தேனையும்
அவள் வாரிக் கொண்டு வந்தாள்.
தொட்டுப் பார்ப்பதற்கு அஞ்சி
நான்
தூர விலகி நின்றேன்;
அவளும் நெருங்கி வரவில்லை.

*2010*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விதியின் நிழல்

அவன் என்னை விட்டுப்
பிரிந்து போன போது
அந்த ஆழ்ந்த
துயரம்
என்னுள் படிக்கிறது.

பின்பனி
அதன் இரக்கமற்ற தூறல்
இரவுமுழுவதும்
அடர்த்தியாய்...

அவனுடன் தழுவிக் கிடந்து
முயங்கி மலர்ந்த,
நினைவுகளோடு
நான்.

269805
14049 CC

தூரத்தே
நிசப்த வெளியிடை
துயரத்துடன் ஒலி எழுப்பும்
ஒற்றைப் பறவையின்
குரலின்
விரகத்தவிப்பில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துடி துடித்துக் கிடக்கின்றேன்
நான்.

அழுத்தமான அந்தக்
காதல் பெரு நெருப்பை
அணைக்க,
கந்தல் சீலையாய்க்
கிடந்து உழலும்
மனசுக்குகந்த
மருந்து அவன்.

அவனை
அவனது வரவை
எதிர்பார்த்திருக்கும்
விதியின் நிழல்
நான்.

*2013*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மறைந்து போனவன்

எனக்குப் பின்னால் தான்
அவன் வந்தான்.
திருப்பிப் பார்த்தேன்
ஆளைக் காணவில்லை.
அருகாக வந்தவனைக் கேட்டேன்.
"அந்த ஆள் எங்கே...?" என்று.
"உனக்கு முன்னால் தானே
போனான் - நீ பார்க்கவில்லை!"
என்றான்
என்னோடு வந்தவன்.

*2013*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விசாரம்

இருத்தலின் அர்த்தம்
இழந்து விட்ட நிலையில்...
புதிது புதிதான
அர்த்தங்களை உள்ளூறிஞ்ச
மனம்
அவாவுகிறது.

அருகில் இருப்பவை
எல்லாமே
சருகாய்
உதிரும் வேளையில்,
மனம்
நிமிர்வு கொள்கிறது.

புதியவை
மனதுக்கு இதம் தருபவை
என்று
எதுவுமே இல்லையா?
அருகாக வந்தவை கூட
ஏன் ஒதுங்கித்
தூர விலகி ஓடுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கானலாய்த் தெரிவதை,
துரத்திப் பிடிக்க முடியுமா…?
முடியுமென
மன மொப்பிய போதும்
முயற்சி அனைத்துமே
களைப்பைத் தருகிறது.
பெரும்
களைப்பைத் தருகிறது!

எதிலுமே
ஏன் அடர்ந்த
வழுக்கலாய்
வியர்த்தம்
எஞ்சி உறைகிறது.

*2014*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீக்கம்

வெளித்திண்ணையில்
இருந்த போது
அந்த எட்டுக்கால்
பூச்சி
தனது வெள்ளிழை வலையைவிட்டு
என்னிடம் வந்தது.
ஏதேதோ என்னைப்பார்த்து
முணு முணுத்தது.
முறைப்பாடு வைத்தது.
பின்னர்,
அது தனித்து விடப்பட்ட
தளர்ச்சியில்
அலைந்து திரிந்தது.
அலைதல் அதன் விதிபோலும்.
சிறு பொழுதின்
சிதைவில்
இன்னொன்று
அதற்குத் துணையாக;
இதற்கும் எட்டுக் கால்கள்.
அதன்
பின்னால் இது இழுபட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது
அதன் பெட்டையா...?
உசாரான ஆண்
அந்தப்
பெண்ணை உரசி உரசி
முன்னங்கால்களை உயர்த்தி,
சிறிது வளைந்து,
அதனைச் சீண்டியது!
புளகமுற்ற பெண்ணுடன்
புடைப்புடன்
புணர்ச்சியில் திளைத்து,
ஸ்கலித மழை பொழிந்தது.

புணர்ச்சி ஆனதும்-
உருண்டு திரண்டு
அயர்ந்து
உயிர்ப்பேது மில்லாமல்
இறுகி
உறைந்து கிடந்தது.
அதனை
அந்தப் பெண் பூச்சி
முகர்ந்து பார்த்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர்,
முகச் சுழிப்புடன்
சிறிது சிறிதாக
உதடுகள் குதிக்க,
நாக்கை வளைத்து
உள் விழுங்க ஆரம்பித்தது...!

சிறிது பதட்டப்பட்ட
நான்,
நடுங்கிய படி
அதனிடமிருந்து
சற்று விலகி நின்றேன்.

*2014*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அட்டி ஏதும் இல்லை

மனத்திரையில்
வந்து வந்து போகும்
அவளைச்
ஏந்தி எடுத்து
என் நெஞ்சில்
ஒட்ட வைத்துக் கொள்ள முடியவில்லை.

இது துன்பம்.

அவளுக்கு
ஏனோ
உதடுகள் மட்டும்
திரட்சி கொள்ளவில்லை;
பூசியது மாதிரி.

மற்றவை எல்லாம்
இருந்தன.

மார்பு மலர்கள்,
நீண்ட கழுத்து,
கண்களில்
மொய்த்துப்படரும் மலர்ச்சி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேனடை உதடுகள்,
மெல்லிடை,
நெட்டைக் கரங்கள்,
வெள் வெண்டி விரல்கள்,
நகங்களில்
என்னமாய் ஒரு பளபளப்பு,
பல் ஈறுகளின்
இடை துளிர்க்கும்
நீரின் சுவை
என்று இவை
சொல்லி மாளாது!

உள்ளொடுங்கிய
அடி வயிற்றில்
உந்திச் சுழியின்
உயிர்ப்பு.
அதற்குக் கிட்டவாக
சிறிது
கீழாக,
பொன் இழை போர்த்திய
செவ்விதழ் பிரிக்கும்
முத்துச்சிப்பி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படிப்பட்ட அவளிடம்
கொட்டிக் கிடக்கும்
அழகை ஆள,
அனுபவிக்க
அட்டி ஏதும் இல்லை எனக்கு!

ஆனாலும்
அவள் என்னை இப்பொழுது
குட்டி போட்ட பூனை போல
சுற்றிச் சுற்றி
வரவே செய்கிறாள்.

அவள் வருகை
வரட்சிக்குப் பின்னான
கோடை மழையின்
குளிர்ச்சி...!

*2014*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெயர்ச்சி

இலைகள் இல்லாத
மரதில்தான்
அந்த
இரு பச்சைக்கிளிகள்
வந்து அமர்ந்தன.

அவை
உட்கார்ந்தவேளை,
ஒரு மழைத்துளி,
அதன்
உச்சாணிக் கொம்பரில்
பட்டுத் தெறித்தது.
திடீரென அம்மரம்
துளிர்த்துப்
பச்சை போர்த்திக் கொண்டது.
தொகையாகத்
தளிர்கள்!
அவற்றில்
அரும்பு,
மொட்டு,
மலர்
என அம்மரம் குலுங்கியது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறு பிஞ்சுகளும்
அங்கொன்று இங்கொன்றாய்த்
தோன்ற...
சில பொழுதுகளில்,
பிஞ்சுகள்
காய்களாகிப் பழங்களுமாயின.

பழங்கள் கனிந்து பழுத்ததும்
அயலில் உள்ள பறவைகள்:
தேன் சிட்டுக்கள்,
கரகரத்தபடி காகங்கள்,
இன்னும் குக்குறுப்பான்,
அடைக்கலாங்குருவி,
கொண்டைக்கிளாத்தி,
மைனா,
மணிப்புறா,
ஆள்காட்டிப்புள்,
கரிக்குருவி,
புலுனி,
தவிட்டுநிறச் சப்பட்டைக்குருவிகள்,
அடிவயிற்றில் மஞ்சள் தடவிய
தூக்காணங்குருவிகள்!

269805



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் இன்னும்
பெயர் தெரியாதவையும்
அங்கு
வகை தொகையற்றுப்
படை எடுத்தன.
அங்கு மொய்த்த
எறும்புகளுடன்
அவை
போட்டி போட்டுப்
பழங்களைச் சுவைத்தன.
பின்னர்
எச்சமிட்டன.

எச்சம்
பெரும் திரணையாய்க் குவிய...
அந்தச் செறிவான
எருத்திடலில்,
சில பூக்கள் மலர்ந்தன.
மலர்ந்த அப்பூக்களின்
தேன்
வழிந்தோடி,
பக்கத்தில் குட்டையாய்த் தேங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குட்டையிலும்
மலர்கள்..!
அம்மலர்கள்
அனைத்தின் மணமும்
ஒன்று சேர்ந்து
அவ்வூரை அள்ளி எடுத்து,
வானில்
நிலாவுக்குப் பக்கத்தில்
வைத்தது...!

இப்பொழுது
அவ்வூரில்
நான்... நான் மட்டும் தான் இருக்கிறேன்!

*2014*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓர உணர்வுகள்

அட
நீ என்ன
இப்படி ஓல்லிப் பாச்சானாய்
இருக்கின்றாய்!

எப்பொழுதோ கண்டதற்கு
இப்பொழுதும்
அப்படியே இருக்கிறாய்!

ஆனாலும்
முன்னை விட
உயரமாய்,
கொஞ்சம் தசை போட்டு
இருப்பது
சந்தோஷம் தருகிறது.

உடைந்து போன
இந்த உடல் நிரவ,
மந்திரம் மாயம்
ஏதுமில்லையா...?
ஓலை நெட்டித் தனத்துடன்
உனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைகளும் கால்களும்.
விரல்கள்
பிஞ்சுப் பயத்தங்காய்களின்
சாயலில்.

மார்புப் பகுதியில்
ஏதாவது திரட்சி,
பொட்டளவாவது இருக்கிறதா...?

தொட்டுப்பூசியது
போன்ற உதடுகள்.

சற்றுக் கருமையாய்
ஒளிரும் கண்களும்
பளிச்சிடும் பற்களும்
அவற்றின் ஈறுகளும் தான்
உன் ஆரோக்கியத்தை
முரசறைகின்றன.
அட
உனது கூந்தல் கூட
பிருஷ்டம் வரை
தழைவது அதிசயம் தான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு இவை
இவை மட்டும் போதும்.
உனது
உள் மன ஓர உணர்வுகளைத்
தட்டித் தடவி
அள்ளி எடுக்க...!

*2015*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதிருமா

உன் பார்வை படும் இடமெல்லாம்
சொற்கள்!
அச் சொற்கள் தொகையாய் உதிர்வதேன் ?
பேசாது மௌனம் காக்கும்
உனது உதடுகளே சொற்களா...?
சொல்...!

உதிராச் சொற்களை
அடை காக்கும் நீ
உதிர்க்கும் அனைத்துமே
சொல் முத்துக்களாய்
இருக்க வேண்டுமென்ற
அதி
கவனமா உனக்கு.

நீ பேசாது
எனைப் பார்த்திருப்பதே
அச்சச்சோ என்ன அழகு!
ஆனாலும்,
நீ பேசவேண்டும்.
நீ பேசக் கருகூட்டுவதும்
சொல் அமுதக் களஞ்சியத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருஞ்சொற்கள்
தேடி எடுத்துச்
சிந்தத் துடிப்பதுவும்
எனக்குத் தெரிகிறது.

இந்தப் ப்ரயத்னம்
எத்தனை நாட்களுக்கு...?

கட்டுக்கள் உடைந்து,
சொல் முத்துக்கள் சாரலாய்
உன்னிடமிருந்து உதிர வேண்டும்!
உதிருமா...?

*2015*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயணவேளை

புகைவண்டிப் பயணத்தின் போது
அவள்
எனக்கு முன்னால் தான்
உட்கார்ந்திருந்தாள்.

இளம் பச்சைக் குருத்தைப்
பார்ப்பது போல
அவள் இருந்தாள்.
அடர்ந்த புருவங்களுக்குக்
கீழாகப்
படபடக்கும் கண்கள்;
கடல் போல் ஈரலிப்புடன்
பெரிதாய் இருந்தன.

அவளது குவிந்த உதடுகள்
ஆயிரம் முத்தங்களைக்
கோரி நிற்கின்றன.

பார்ப்பதற்கும்
என்னுடன் பேசுவதற்கும்
அவள்
துடிப்பது போலிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிந்து கொண்ட நான்
அவளுடன் பேசினேன்.

பேச்சு உடைந்து
மோதிய
பிரவாகத்தில்
அவள் பலதும் பத்தும் பேசினாள்.

நவீனமான எதைப்பற்றியும்
அவள்
தெரிந்து வைத்திருந்தாள்.

கலைகள் என்று வரும் போது
புதிய எழுத்துப்
புனைவுகள் பற்றி
நிரம்ப அவளால் பேச முடிந்தது!

ஜனரசனைக்கு எழுதும்
எழுத்துக்களை அவள் ரசிக்கவில்லை.
பேசும் போது
நல்ல படைப்புகள்
ஒரு வகையில்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணித்தரளங்களுக்கு ஒப்பானவை
என்று கூறினாள்.

புதிய சினிமா
என்று வரும்போது
உலகத்தரம் வாய்ந்த இயக்குனர்களைத்
தொட்டுச் சென்றவள்,
சத்யஜித்ரே பற்றியும்
அகிரா குரோசாவா பற்றியும்
கதைக்கும் போது
சற்றுப் புளகமடைந்து,
மெய்
விதிர்த்துப்போனதைக் கண்டேன்.
அப்பொழுது
அவளது வலது கரத்தை ஏந்தி
முத்தமிட்டேன்.
அவள் சிலிர்ப்படைந்து,
சின்னச் சிணுங்கலுடன்
சிரித்தாள்.

சற்று நிதானமடைந்ததும்
ஓவியம் பற்றிய பேசினாள்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஈழத்தில் மாற்கு;
மேற்கில் பிக்காஸோ,
ஃபிரான் சிஸ்கோ.டி. கோயா,
வான்கோ, மைக்கல் ஏஞ்சலோ,
சல்வடோர் டாலி
என்று நிரலிட்டவள்-
இந்திய ஓவியர்களில்
அகாலத்தில் மரித்த,
அமரித் ஷேர்கில் பற்றி
நிறையவே பேசினாள்.

அதிக அளவு Distortion
இல்லாத ஓவியங்களைத் தந்த
இவர்
இந்திய மக்களின்
ஏழ்மையை,
தன் முனைப்பழிந்த பணிவை,
என்னமாய்த் தனது ஓவியங்களில்
கொண்டு வந்துள்ளார்.'
என்று வியப்பிலாழ்ந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சினிமா, ஓவியம்
பற்றிப்பேசியவள்;
நடனம்
நாடகம்
சங்கீதம்
பற்றியும் சரளித்தாள்.

எதைப்பற்றியும்
கனதியாய் அவளால்
பேச முடிந்தது.
அவள் பேசும் போது
அவளது தீஞ்சுடரொத்த
நுனி நாக்கு
அவளது இனிய இதழிடை
தழைந்து,
துவண்டு
துடி துடிக்கும் அழகை
அன்றெல்லாம் பார்த்தபடி
இருந்தேன்.
அவளோ அதைக் கண்டு கொள்ளாத
பாவனையில்...!

*2015*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதவி

எந்த இடத்தில் என்றில்லை
ஏதாவது ஓர் இடத்தில்
எதையாவது தவற விட்டு விடுகிறேன்.
அருகில் நிற்பவர்,
பின்னால், முன்னால் நிற்பவர்
என்று
யாராவது ஒருவர் அதை எடுத்துத் தருகிறார்.
இன்று எனது அடையாள அட்டை.
நேற்று வங்கிக் கணக்குப்புத்தகம்.
நாளை ஏதாவது இருக்கலாம்!
பயப்படும் அளவுக்கு ஏதுமில்லை.
துணையாக என் கூடவே ஒருவர்
இருந்து கொண்டேயிருக்கிறார்.
அவர் உதவி எப்பொழுதும்
எனக்கு நிறையவே கிடைக்கிறது.
இது விஷயத்தில்
நான் கொடுத்து வைத்தவன்.

*2015*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாய மந்திரங்கள்

எப்பொழுதும்
சொற்கள் ஏதுமில்லாமல்
என்னை
நீ
பார்க்க வருகின்றாய்!

பேச்சிழந்திருக்கும்
அந்த நிலையிலும்
நீ
நிரம்பிய அழகுடன் இருக்கின்றாய்.

நான் பேசும் போதெல்லாம்
மௌனமாய்
உன் காலம் கரைந்து வடிவது
அப்படியொன்றும்
அதிசயமானதல்ல,
அதுவே உனது இயல்பு
என்பது எனக்குத் தெரியும்.

ஆனாலும்
நீ
உணர்ச்சிகள் ஏதுமற்ற ஜடமல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர்ப்பும்
உள்ளுருகும் உணர்வும்
உள்ளவள்.

நான் பேசும் போது
உன் கண்களில் ஒளிரும்
நிலவின்
ஏற்ற இறக்கங்கள்.

ஓரப்பார்வை.
இன்னும்
ஈரலிப்புடன் கூடிய
உனது
உதட்டோரச் சுழிப்பு.
நான் பார்த்திராத வேளை
பார்த்து நிற்கும்
உனது பார்வையில் துளிர்க்கும்
தயை.

உனது நுனி நாவில்
உதிரத் துடித்து நிற்கும்
வெட்கம் பூசிய சொற்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று எல்லாமே
உனது இருப்பையும்
அசையா அன்பையும்
எனக்கு உணர்த்தும்
மாய மந்திரங்கள்.

*2015*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தனியன்

துயரங்களில் இருந்து
விடுதலை கிடைக்கு மெனும் நம்பிக்கை
அருகியே வருகிறது.

நினைவுகள், ஞாபகங்கள், ரத்தத்தோய்வுடன்
கருமை கொண்டு
வெடிலடிக்கின்றன.

இவற்றில் இருந்து விடுதலை என்பது
இனி இல்லை.

பிசுபிசுத்துக் கிடக்கும் மனத்துயரங்களை
ஆற்றவல்லார் யாருளர்...?

வாழ்தலை, வாழ்வின் அர்த்தங்களை
முழுமையாக உணர்த்தியவள் நீ...!

உனது அன்பின் சாரல் எனக்கு இல்லை என்றான
போது,
எனக்கு இங்கு எதுவுமில்லை என்றாகியது.

தனிமையில் தவிக்கும் நான்
அரை குறையான
தனியன்.

*2015*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பக்தி

அவளைப் பற்றி
நான்
ஏதும் அறிந்திருக்கவில்லை.

ஆனாலும்
அவள் எனக்கு நன்கு தெரிந்தவள் போலத்
தோற்றம் காட்டுகின்றாள்.

ஞாபகங்களின்
உள் அடுக்குகளை உடைத்துப் பார்த்தேன்;
அங்கு,
அவளைப் பரிச்சயம் கொண்டதற்கான
பதிவுகள் அதிகம் இல்லை.

முன்பு,
முன்னால் தொலைந்து போன
நாட்களில்
அவள் என்னுடன் இருந்திருக்கக் கூடும்!

ஓயாது மன அரங்கில்
வந்து வந்து உழலும் அவள்
இதமாய்த் தரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*இந்த நெருக்குதலுக்குப் பொருள் என்ன...?*

*கனவிலும் நனவிலும் கூடச்*
*சில சமயம்*
*அருந்தலாயக் கண்டு பழகிய*
*அவளை*
*இன்று முழுமையாய்*
*எங்கள் ஊர் அம்மன் கோயிலின்*
*கர்ப்பக்கிரகத்தில்...!*

*அங்கு அவள்*
*என்னைப் பார்த்தபடி;*
*ஒரு*
*சின்னச் சிரிப்புடன்.*

***2015***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தளும்பி வழியும்

நான் பேசுவதெல்லாம்
வெறும் சொற்களா…?
ஏதாவது ஒரு சொல்,
ஒரு பதம்
உன் மனதைத் தொட்டிருந்தால்
இதைக்கேள்.
இதை மட்டும் கேள்.
உனது
இயல்பான கவனிப் பின்மை
இதற்கு வேண்டாம்.
உன் புலன்களைத்
தொட்டு அளைவது போல
எனக்குப் பேச வராது.
இருந்தாலும்…

எனது மனசு முட்ட முட்ட
தளும்பி வழியும்

எனது பிரியமும் காதலும்
உனக்கு,
உனக்கு மட்டும் தான்…!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலாதி காலமாய்
உன் நினைவு
என்னில் தோய்ந்தபடி.

*2015*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளமை

எரிமலைச் சாம்பலின் மெதுமை
அவளது பார்வையில் இருந்தது.
அவள் கண்கள் பட்ட இடமெல்லாம்
தாமரை புஷ்பித்தது.
பொன் நிறமான அவளது விரல்கள்
என்னை ஸ்பரிசித்த பொழுது,
நான் தேவனானேன்.
அவளது இதழ்களில் இருந்து
வடிந்த தேனில்,
ஏழு லோகப் பூக்களின் வாசனை
இருந்தது.
அவளது முத்தம் கூடத்
தேவகன்னிகைகளுக்கு உரியதாக
இருந்தது.
முத்தத்தின் பின்னான
முயக்கம் ஏதுமில்லாமலே
அவள்
கருவுற்றிருப்பதாகச் சொன்னாள்.
நம்பாமலே அவளைப்பார்த்தேன்.
அவளிருந்த இடத்தில்,
வயிர மணிக்கல்லொன்று
இருந்தது.

269805



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன், அவ்விடத்தில்
ஓர் ஒளியும்
இளஞ் சூடும் இருந்தது.

*2015*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கை வண்ணம்

காலையில்
சூரியன் கீறலாய்க் குலைந்து போய்க்
கிடந்ததைப் பார்த்ததும்
எனக்கு ஆச்சரியம் தாளவில்லை .
எல்லாமே ,
ஓம் ஓம்
எல்லாமே இங்கு முடிந்து விட்டதால்,
சூரியன்
அப்படி இருந்தான்.

அவனது குலைவை நிவர்த்தி செய்ய
என்னால் முடியுமா...?
தனியொருவனால் ஆகாது என்பதால்
ஊரெல்லாம் அலைந்தேன்.

ஊரில்
ஒரு புழு பூச்சி கூட இல்லை .
உயிர் அருட்டல் ஏதுமில்லாப்
பாலையாய்த் தகித்தது ஊர்.

ஊரில் சில எரு விட்டைகள்
அங்கொன்றும் இங்கொன்றுமாகச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிதறிக் கிடந்தன.
விட்டைகளைத் தொட்டதும்
பொன் வாத்துக் குஞ்சுகளாய் அவை மாறின.

குஞ்சுகள் சென்ற வழி
நீரோடை ஒன்று இருந்தது.
நீரோடையில் தவளைகள் மட்டும்தான்
இருந்தன.
தவளைகளின் கால்கள் மிக நீளமாயிருந்தன.
அக்கால்கள் பட்ட இடமெல்லாம்
பசும் புல் தடங்கள்.

பனி படர்ந்த அப்புற்தடங்களின்
நடுவே,
வெண் பனி இலைகள் கொண்ட
பெயர் தெரியாப் பெருமரம்.
மரத்தில் மஞ்சள் நிறக்கனிகள்.
கனிகளின் சுவை அறிய அவற்றைப்
பறித்துப் புசித்தேன்.
கனிகளைப் புசித்ததும்
மேல்வான் விளிம்பில்
குலைந்து போய்க் கீறலாய்க் கிடந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேயோன்
செங்கோள வடிவம் கொண்டு -
சரிந்து வழிந்து மறைந்தான்.

நாளை
கீழ் வானில் குறையற்ற, குலைவுகள்
ஏதுமற்ற சூரிய உதயம் உண்டு
எனும் நினைப்புடன்
நடந்தேன்!

காலை வருவதற்கு இன்னும்
கன நேரம் இருக்கிறது!
காலை, நாளை வருமா...?
வரும்...!

*2015*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிசயம்

சிறகுகள் ஏதுமில்லாமல்
அது
பறந்து சென்றது.
நிறங்கள் ஏதுமில்லாமல்
நீரின் நிறத்ததாய்
அது வானைத் தொட்டது.

வானத்தில்,
இச்சை ஏதுமில்லாமலே
நட்சத்திரங்களுடன்
உரையாடியது.
பின்னர்,
அவற்றுடன் முயங்கியது.
உறவில் வீழ்ந்த
ஒவ்வொரு நட்சத்திரமும்
கருவுற்று,
நிலத்தில் சரிய
ஓராயிரம் வண்ணத்துப் பூச்சிகள்
உண்டாயின.
ஒவ்வொன்றும் ஒவ்வொரு நிறம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருமையும் வெண்மையும்
கலந்தவை.
ஊதாவில் கரும்புள்ளிகள்
மட்டும் உள்ளவை.
மென்சிவப்பு.
குங்குமத்தில் பொன்னிழைகள்
ஊடுபாவியவை.
இலைப்பச்சை.
தளிர்ப்பச்சை.
தயிர் வெள்ளை .
மரகதக் கோடுகளுடனான கருநீலம்.
பவளச் சிவப்பு
இன்னும் இன்னும்...!

அப்பூச்சிகள் யாவும்
ஒன்றாய் இணைந்து, திரண்டு,
குழைந்து, குமைந்து,
உருவிழந்து - பின்னர்,
உருவமில் உருவம் பெற்றுப்
பறந்து திரிந்தன.
அதுவும் இறக்கையற்ற
அதிசயப் பறத்தல்தான்!

*2015*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலன்களின் பாடல்

சிற்றலைக்குள் தெரியும் நிலவு.
வண்டூதும் மலர்கள்.
தெருவோரம் கிடக்கும்
கால் உடைந்த பதுமை.
பொலிவிழந்து கண்சிமிட்டும்
கிழக்கு வான் நட்சத்திரம்.
தூரத்தில் எங்கோ தவித்தழும்
பெண்ணின் பிரலாபம்.
சருகுகளில் அசைந்து செல்லும்
பாம்பின் சரசரப்பு.
பசுப்பாலின் மொச்சை.
யதேச்சையாக அந்த வீட்டுச்
சன்னலில் தெரிந்து மறையும்
பெண்ணின் கோட்டோவியம்.
தொலைவில் சிறகசைக்கும்
ஒற்றைப் புள்ளின்
விரக ஒலி
என்று...
புலன்களை உரசும் உணர்வுகள்
மனசை வருடுகின்றன,
புரிதலற்ற மௌனத்துடன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துயரம்

வானத்தில் ஏதும் இல்லை
ஒரு
கீற்று முகில் கூட.

சுடரும் சூரியன்
எங்கோ வானத்தின் அடியில்.

ஒரு பறவை,
அசையும் இளம் காற்று,
ஒரு மழைத்துளி,
சுடரும் ஒற்றை நட்சத்திரம்,
அடி வானச் சிவப்பு
என்று எதுவுமே இல்லை.

பார்ப்பதெல்லாம் பாலை வெளியாய்த்
தகிப்பதில் இருந்து-
நின்
பிரிவு தெரிகிறது.

பிரிவு துயரம் தரும்.

*2016*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இருளின் உயிர்ப்பு

வானம் இருண்டு கிடக்கிறது;
சூரியனின் ஒளிக் கீற்றுக்களை
யரோ திருடிப் போயிருக்க வேண்டும்.

மையிருட்டாய் இருந்த போதும்
ஒளித் துகள்கள் ஏதோ ஒரு மூலையில்
ஒட்டிக் கொண்டு கிடக்கின்றன.

உருகிக் கரியாய்ச் சிந்தும் இருளில்
ஜீவித்திருத்தல் சாத்தியமில்லை
என்று இருந்த போதும்
உயிர் மூச்சின் வெம்மை
அங்கு
லேசாய்க் கசிகிறது.

உயிர் அழிந்து போகாமல்
அவ்விடத்தில்
ஒட்டிக் கொண்டிருப்பது எதனால்...?
பதில் தர இயலாத
வினாக்களின்
ஒன்றன் பின் ஒன்றான
தொடர்ச்சி...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர் அசைவையே காவு கொள்ளும்
அளவு அங்கு இருள் இருக்கிறது.
ஆனாலும்,
உயிர் அழியாமல் ஒட்டியபடி.

***2016***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திசை மயக்கம்

லேசாகப் பனி தூறிக்கொண்டிருந்தது.
பின்னிரவில் தான்,
நான்
நடந்து கொண்டிருந்தேன்.
மயிர் கால் தோறும்
சில்லிட்ட குளிர்
இதயத்தை உறையவைத்தது.

தூரத்தில்
அந்த ஆழ்ந்த நிசப்தத்தை
சிலிர்ப் படைய வைத்தபடி
அந்தப் பாடல் ஒலி;
விரக உணர்வைச் சீண்டும்
ஒலி;
மரகத வீணையின்
புடைத்த நரம்பின் கார்வைகளுடன்.

நடந்த அடைய முடியாத
எல்லையில்
அந்த நாத ஒலி...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்த சுவடுகள் அழிந்து
திகைத்து நின்ற நிலையில்,
நாலா பக்கமும் அந்தக் கீதத்தின்
இசைப் பிணிப்பின் சிதறல்கள்;
விரக லகரியின்
பரவசம் தொடத் துடிக்கும்
உரசல்களுடன்.

திசையழிந்து
திணறிய நான்
வகையறியாது
தவித்தபடி...!

*2016*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேருருவம்

நிலம், நீர், வான்
என் பின்னால்
பெரிதிலும் பெரிதாய் விரிவு கொள்ள,
திரும்பினேன்.

நிலம் மட்டும் தெரிந்தது;
என் கண்படு தூரம் வரை
படர்ந்து பரந்து...!

பெரும் காதலின் தவிப்புடன்
நீரினைப் பார்த்தேன்.
நீரில்லை,
வான் மட்டுமே தெரிந்தது.
வான் முகத்தில்
நீ தெரிந்தாய் பேருருவாய்...!

வானத்தில் கண்பட்டதும்
நீரின் முழுமையாய்
நீ...!
நீரின் நிறமற்ற நிறமதுவாய்...!

*2016*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்க்கை

இனி,
இரவுகள் எல்லாமே
பனியில் நனைந்தபடி,
கடந்தேக வேண்டுமென்பது
எனக்குத் தெரிகிறது...!

விரகமென்று ஏதும் இல்லாததால்
நாம் விலகி நிற்கிறோம்.

காமம் கரைந்து வடிந்து
கரை தட்டிய மரக்கல மாகிவிட்டது.

கலவியில் திளைப்பதும் சுகிப்பதும் தான்
வாழ்க்கையா...?
விரிவு கொள்ளும் விசிம்பில்
தொங்கி இருக்கும் பிசிறுதானே
காமம்.

காமம் கரைந்து, வடிந்து
கரை தட்டிய மரக்கலமாக வேண்டியதுதான்
என்பது எனக்கும் உனக்கும் தெரிகிறது.
முதுமை நரைத்துப் பிசிறு தட்டித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தும்பு தும்பாய்ப் போனதுவும்
இதற்கான காரணமா...?
விலகல் ஏதும் இல்லாமாலே
நாம்
பிரிந்து கிடக்கிறோம்.

காமம் அல்ல,
வாழ்க்கை பெரியது.
எதற்கும் மேலானது.

சுகம் தருவது காமம்
மாறாக சுடர்மிகு எல்லை விரிவையும்
இருப்பின் உள் அர்த்தங்களையும்
உரசி உரசி
உணர்த்துவது வாழ்க்கை.

இனி,
இரவுகள் எல்லாமே
பனியில் நனைத்தபடி,
கடந்தேக வேண்டுமென்பது
எனக்குத் தெரிகிறது...!

*2016*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புரிதல்

எம்மிடை யிருக்கும்
பிரிவில்
ஏன் துயரம் தோய்திருக்கிறது.

எனது மனதில் ஊறி நிற்கும்
வண்ணங்களிலெல்லாம்
நீ!
என்னால் புறக்கணிக்கப் பட்டு விட்டதாக
உணர்கிறாயா?

எப்பொழுதுமே
ஈரமாய் இருக்கும் உனது புன்னகை
உலர்ந்திருப்பதற்கான காரணம்
இதனால் தானா?

இரக்கமற்றே இரவுகள்
கழிகின்றன.

இரவுப்பறவைகளின் கானாமிர்தச் சுவை
கர்ண கடூரமாய் ஒலிப்பது
உன் பிரிவை உணர்த்த
அழுத்தம் தருவதற்கா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓசை ஏதுமின்றி
நான்
மௌனித்திருந்த போதும்
உனது காலடி ஓசை
என்பக்கலில்
அழுத்தமாக ஒலிக்கிறது.

நீ வருவதாயின்
உனது வருகையை
தவழ்ந்து வரும் ஈரலிப்பான
தென்றலிடம் சொல்லிவிடு.

காற்று நல்ல கதை சொல்லி
என்பது
எனக்குத் தெரியும்.

*2019*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுவை

கன்னி கழியாத பெண்
என்று சொன்னாள்.
ஆனால்,
கள்ளங்களெல்லாம்
அவளிடம் இருந்தன.
பொட்டளவு காமம் கூட
அவளிடம்
இல்லை என்று எண்ணினேன்.
ஆனாலும்
அவள் தொட்டதும் துவண்டாள்.
அமுத கலசமாய் ததும்பிய
உதடுகளில்
அனைத்துச் சுவைகளும் திரண்டுவர
அவள் முத்தமிட்டாள்.
கனிந்த உதடுகள்
கரைந்து போக,
அவளது அடி எயிற்றில் ஊறிய
அமுதத்தை
மாந்தி மாந்தி மறுகினேன்.
கலவியில்லாமலே,
முயக்க மதுவ மயக்கம்.
சிலிர்த்துக் கிடந்த அவளைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொட்டதும்
சிறு பூவாக உருக்கொண்ட
அவள்
மறையும் வரை உடனிருந்தாள்.
காமத்தின் உச்சத்தைத்
தொடமுன்னர்
அவள் எங்கே சென்று தொலைந்தாள்.
ஆனாலும்
அவளுக்காகக் காத்திருப்பது கூட
ஒரு சுவைதான்!

*2018*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கருமை

எல்லாமே
கறுப்பாய்...
கறுப்பில் மிதப்பதான உணர்வு.

எழுந்து பறக்கும் பறவைகள்,
அசைந்தாடும் மரங்களின்
தளிர்களும் இலைகளும்-
மொட்டும் மலர்களும்.
கறுப்பு வண்ணத்தையே
வழிய விடுகின்றன.

எனது குரலில் கூடக்
கருமையின் உடைப்புடன் கூடிய
அடைசல்.

நிலம்,
நீர்,
வான்
எல்லாமே கருமை பூசி
தெரிவது எதனால்?
இந்தக் கருமை
தீயதின் அறிகுறியா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழியா அழகு இந்தக் கருமை என்பார்களே!
இல்லை என்பதுபோல
யாவும் கருமையாய்...

கடவுளர், கன்னிப்பெண்கள்,
குழந்தைகள் என யாவரும் கருமையில்
தோய்த்து எடுத்துப் போடப்பட்டது போல...
மாற்றங்கள் இல்லாத
இந்தத்
தோற்றங்கள் ஏன்?

உருகி ஓடும்
இந்தக் கருமை
அழிவைத் தரும்
பேரிடரின் வடிவமா?

கருநாகமாய் விரிவுகாட்டும்
இந்தக் கருமையில்
சிதம்பிய
ஒளியின் சீறல்கள்...!
இது எப்படி...
எப்படி...?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனது குலைந்த நிலையில்
கருமையுள் நாம் புதைந்து போவதுதான்
நமது
விதியாய் விரிகிறதா…?

எல்லாமே
கறுப்பாய்…
கறுப்பில் மிதப்பதான உணர்வு.

*2018*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரசத் துளிகள்

இரவு.
புரண்டு படுத்தேன்,
ஆழ்ந்த துயிலற்ற
அனந்தல் நிலை.

பாரவண்டி யொன்று பக்கத்து
வீதியால்
போவது காளைகளின்
அழுத்தமான நடையில் தெரிகிறது.

முற்றத்து மல்லிகையின்
உதிரும் ஓசை,
அத்துடன் அதன்
வாசமும்-
வீட்டின் உள்ளாக வந்து
மூக்கைத் துளைக்கிறது.

பக்கத்து வீட்டுப் பாத்ரூமில்
நீரின் சலசலப்பு.
மனைவியுடன் உறவு கொண்ட
பின்னர்
யாரோ ஒருவன் உடல் கழுவுகிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூகையின் அலறல்
தூரத்தில்.
அதில் ஓர் உவகையின்
சாரல்.
கலவியின் பின்னான
அந்த
ஸ்கலித ஒலியில்
காதலின் ரசத்துளிகள்.

இரவு.
புரண்டு படுத்தேன்,
ஆழ்ந்த துயிலற்ற
அனந்தல் நிலை.

*2018*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெரிய சுகம்

அவள்
அருகே வரும் போதெல்லாம்
அந்த மணம் வீசுகிறது.
இதழ் உடைந்த தாழம்பூ
வாசம் அது!

காட்டுத் தீயாய்ப் பரவிவரும்
அவளது காமத்தீயை
தொட்டு,
மனச்சுமைகள் அணையாது தவிக்கும்
என்னைச்
சடுதியில், கொண்டலிட்ட
மழைத் துளியாய்க்
குளிர்விக்கும் குணம்
அவளிடத்தில்
நிரம்ப உண்டு.

சுவையரும்பி
சொரிதல் கொள்ளும்
அந்த நிறை உறவில்,
உச்சி தொட்டு
நிலம் உரசும் பாதம் வரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புளகமுறும் உனது
உடல் தொட்டுக்
குதித்தெழுந்து,
கலவி செய்தல்
தெவிட்டுதல் இல்லாத
பெரிய சுகம்.

*2018*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொரிவு

அரும்புதல் இல்லை
மலர்தலும் இல்லை
ஆனாலும்,
காமம்
இங்கு
பூப்பூவாய்ச்
சொரிகிறது.

*2018*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தித்திப்பு

இரு,
நில்,
நட,
நடை
உடலுக்கு உதவும்.
பலம்தரும்.
கண்ணுக்கு
அதிக ஒளி ஏற்றும்.
தூரப்பார்!
தொங்கலில் வானவில்.
வானவில்லில் ஓர்
இழை எடுத்து
நெய்த பட்டுத் துகில் துடிப்பது
அவளுடலில்தான்.
பட்டாய்த் தெரியும்
அவள்
தொட்டுத் தந்த முத்தம்
தெவிட்டுதல் இல்லாத தித்திப்பு.
தேன் சொரியல்.
இனிமை, இனிமை...
இது போதும் எனக்கு.

*2018*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூச்சு முட்டுதல்

இவர்களில் சிலர் இப்படித்தான்
இருக்கிறார்கள்.
அப்படித்தான் அவர்களால் இருக்கமுடியும்.
சூழல் முழுவதையுமே
தம்
ஆளுகைக்குள் உட்படுத்திக்கொண்டதான
கூத்தடிப்பு அவர்களுக்கு!
அத்துடன் யதார்தத்தைப் பற்றிய
அக்கறை ஏதுமின்றி,
தம் கற்பிதங்களை மட்டும்
கருத்திருத்தி அதில் திளைத்து,
சூழல் மீதும் சுற்றவுள்ள சிருஷ்டியாளர் மீதும்
விமர்சகராய்,
கருநிறப் போர்வை போர்த்தியபடி
குரூரமாகத் தாக்குதல் நடத்துகிறார்கள்.
இது வியப்பையும்
தீரா வலியையும்
இன்னும் இன்னும் ஏதேதோவெல்லாவற்றையும்
ஒருசேரத் தருகிறது.

*2018*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சித்திரம்

எதேச்சையாகப் பார்க்கும் போதெல்லாம்
அவை
தெரிகின்றன.
இதழ் சிவந்து சிரிக்கும்
குழந்தை.
வானத்தில் விரக ஒலி
எழுப்பிப் பறக்கும்
ஒற்றைப் பறவை.
இடை எங்கே என்று
தேடும் வகையில்
அலமந்து
ஓடிவரும் அந்த இளமை ததும்பும்
குமரிப் பெண்.
அலர்ந்த பூவிலிருந்து சிந்தும் தேன்
ஏந்தி மாந்தும்
அந்தச் சிட்டு.
கூட்டத்தில், சனசத்தடி நெருக்கத்தில்
விழி பிதுங்கி மூச்சிரைக்கும்
அந்தச்
சின்னஞ் சிறுபயல்.
தலை கீழ் நடை பயின்று
போர் முரசறையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த வினோதச்
சிறு குருவி.
என் வருகை தனைப் பார்த்திருந்து
கண் பூத்திருக்கும்
என் துணை என்று எல்லாமே
எனக்கு
இனிய சித்திரங்கள்.

*2018*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விரிவு

உற்று உற்றுப்
பார்த்தேன்,
யாரோ போவது போலிருந்தது.
யாரது?
தெரியவில்லை.
தொடர்ந்து போய்ப்
பார்த்ததில்
அது யாருமில்லை என்று
தெளிவாகியது.
என் முன்னால்
சூனியப் பெருவெளியின்
விரிவு.

*2018*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விரகம்

*சிறு இடையும்*
*பூ உடலும்*
*முல்லையாய்ப் பல்லும்*
*குவி முலையும்*
*என்ன சொல்லி*
*என்னைக் கொல்ல வருகின்றன!*

*விரக நுனியின்*
*தாபத் தளிர்ப்பு*
*பரவசம் கொள்ளுமா?*

***2018***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலை

கடல் இருக்கும் வரை
அது இருக்கும்;
அலை.
நுரை கக்கித் தரை தொடும்
அதன் அழகு
சொல்லி மாளாது.

*2018*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துயரம் தரும் அழகு

காற்று இரகசியம் பேசும் ஒலி.
தூரத்தில்,
தனித்திருக்கும் ஒற்றைப் பறவையின்
விரகம் ததும்பி வழியும் தாப லகரி.
வான விளிம்பில்
ஒற்றையாய் ஒட்டி இருக்கும்
வெளிறல் முகிலின் மூச்சிரைப்பு.
பசிய தடங்களைத் தொட்டசையும்-
அளையும் நீரோடை.
பட்டொளி போர்த்திய
அடிவானில்
தலை காட்டத்துடிக்கும் சந்திரிகை.
இவையாவும் ஏன் ஆழ் துயரம் தரும்
அழகாய்...!
எல்லாமே என்னுடன்
நீ
இல்லை என்பதாலா...?

*2018*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எதனால்

இருப்பதற் காகத்தான்
இங்கு
வருகிறோம்.
ஆனாலும் ,
நாம் இங்கு இருப்பதில்லை.
இது எதனால்?

*2018*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெரிவது எது ?

அது
இதில் இல்லை என்பது தெரிகிறது.
இதில்தான் இருந்தது என்பது தெரியும்.
தேடி நகர்ந்த போது,
அதில் இது இருந்தது.
அது இல்லை.
அதுவா இல்லை இதுவா...?
இரண்டும் இல்லை என்பது
இப்பொழுது தெரிகிறது.

*2018*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உறவு

சூரியனுடன் நான் கொண்ட
உறவு
இன்று நேற்றல்ல ஜன்மபரியந்தம்.
அவனுடனான உறவில்,
உற்று, உயிர்த்து, உணர்ந்தவை அனந்தம்.
அவன் இப்பொழுதெல்லாம் என்பக்கம்
வராமலே விட்டு விட்டான்.
சோம்பலுடனான அவனது போக்கில்
துளிர்ப்பு ஏதும் இல்லை.
வசக்க மறுக்கும் அவனை
நான்
வாளிப்புடன் பார்த்த போதும்
அவன் நிமிர்ந்து பார்க்காமலே
ஓடுகிறான்.
ஆழ்ந்த துயரத்துடன்
அவனைத் தொடர்வது
எனது விதியாகி விட்டது.

*2018*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உருவம்

எல்லாமே
தலை தடுமாறிய நிலையில்.
கால்களில் கைவிரல்கள்
முளைத்தபடி...
உடலின் இடது பக்கத்தில்
உனது
ஜனன உறுப்பு,
மண்டிய பச்சிலைக் காடுகளுடன்.
பற்களைத்தேடினேன்,
வெண்முத்துக்களாக பின்முதுகில்
ஒட்டப்பட்ட நிலையில்.

நீ பெண் என்பது தெரிகிறது...
இருக்கும் மார்பகங்களும்
பூமிப் பந்தாய் திரட்சி கண்டு
உனதுபிருஷ்டத்தை தழுவியபடி.

சூப்புத்தடி போன்ற
முலைக்காம்புகளில் இருந்து
தேன் நிறமாய்ச் சிந்துவது என்ன...?
புளிப்பு வாடை வீசும்
அந்த மதுவம் தேவபானமா...?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்கள் இருக்குமிடம் தெரியவில்லை,
ஆனாலும் உன்னால் பார்க்க முடிகிறது.
உதடுகள்
பூந் துகள்களாகவும் மகரந்தப் பொடிகளாகவும்
அடிவயிற்றுக்கு அருகாக...

கைகளைத் தேடினேன்
அவை நேர் கோட்டில் வளைவுகள் ஏதுமில்லாமல்,
என்னை அணைத்தபடி...
இந்த மாயரூபத்தில்
ஏனைய அங்கங்கள் யாவும்
மறைந்து கிடக்கின்றன...!

உன் இனிய வாசம்
மட்டும்
என்னிடத்திலும்
இன்னும்
இந்த ஊரிடத்திலும்
உறைந்த நிலையில்
தளும்ப முயற்சிக்கிறது.

*2018*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியும்

இந்த மண்தான்
அவனது.
அதில் அவனுக்குப் பெருமை.
ஆழ வேர் ஊன்றிப் பரந்து கிடக்கும்
அவனது வேர்கள்
இந்த மண்ணுக்கே உரியது.

அப்பன், பாட்டன், முப்பாட்டன்
என்று அவனது முன்அடிகள் அனைத்தும்
இந்த மண்ணில் பிறந்து உழன்ற
கூலிகள்.

வயிற்றுப் பிழைப்புக்கு ஆண்டைகளிடம்
அடிபட்டவர்கள்.
இன்னும் மிதிபட்டவர்கள்.
அவர்களிடம் இல்லாத குணம்
இவனிடம் உண்டு.

தனது எசமானர்களின்
கை உயர்த்தலை
இவன் சகித்துக் கொள்வதில்லை.
செய்த வேலைக்கு ஏற்ற கூலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதுதான்,
இவனதும், இவனது சகதோழர்களினதும்
மந்திரச் சொல்.

முரட்டுத்தனமாய் ஏதும் நடந்துவிடும்
எனத்தெரிந்தால்,
முரண்டு பிடிப்பதில் இவர்கள்
பின்நிற்பதில்லை.

அவர்களின் மனைவி மக்களுக்காகத்தான்
அவர்களது இந்தப்பாடெல்லாம்.

அரை வயிறாவது அவர்களுக்கு கிடைக்க வேணும்
என்பதுதான்
இவர்களது கவலை.

அத்துடன் அவர்களது பிள்ளைகள்
தற்குறிகளாய் விடக்கூடாது
என்பதில்,
அக்கருத்தினைப் பொதித்து வைப்பதில்,
விடாக்கண்டர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும்
அவர்களது பிள்ளைகளது
உணவுடன், தரக்கூடியது கல்வி என்பதுதான்
அவர்களது சத்தியம் தழுவிய
வேத மந்திரம்.
அதற்கு இவர்கள்,
தன்மானம் இழக்காமல்
தந்திட இவர்களிடம் எல்லாம்
இருக்கிறது;
உயிர் உட்பட.

இவர்களுக்கு இவையெல்லாமும் வேண்டும்
கிடைப்பது தடைபடும் வகையில்
குறுக்கே நிற்பவர்கள் எந்தக் கொம்பனாயினும்
உசுப்பிவிட இவர்களால்
முடியும்.

*2019*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பு செய்

நிதானமாகத்தான் நடந்து வந்தாள்.
அவள் பேசும்போது
சரளைக் கற்களில் சிற்றருவி
சலசலப்பது போலிருந்தது.

கண்களில் கோடிக்கனவுகளைத்
தேக்கி வைத்திருந்தாள்.
அவளது
கனவுகளைப் பற்றிக் கேட்க
நான் விரும்பாத போதும்
அவளே
அவை பற்றிப் பேசினாள்:

"உன்னை எனக்குப் பிடித்திருக்கிறது.
ஆனால்,
ஆண் என்பதால் தயக்கங்கள்
பல உண்டு.
தயக்கங்களை ஒதுக்கிவிட்டு
உன்னைப் பார்க்க விரும்பினாலும்
என்னால் அது முடிவதில்லை.
உன்னிடம் நான் எதிர்பார்ப்பதெல்லாம்
ஒரு சிலதுதான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேசிப்பது போல் பாவனைகள்
உன்னிடம்
ஏதுமில்லை என்பது தெரிகிறது.
அந்த நிஜத்தைப்
பற்றி நின்று
அன்பைச் சொரிவாயா...?

கூரிய வேலாய் உன்கண்கள்
என்னைக் குத்துகின்றன.

இந்தக் கள்ளம்போக்கி
என்னை அணுகு.

அன்பு செய்வது
அழகு
அது உன்னால முடியுமா...?
முடிந்தால் என்னிடம் வா!
வந்து பழகு.
உன்னைப் பூரணமாய்ப்
புரிந்துகொள்ள
அதுஉதவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிது பிசிறலான பேதம் ஏற்பட்டாலும்
என் நெஞ்சின் கசிவை, காதலை
உன்னால் உணர முடியாது.

உன்னில் எனக்குப் பிடித்ததெல்லாம்
இளகிய மனசுடன் பார்ப்பதும்
பேசுவதும்தான்.
அந்தப் பேச்சில் ஓரளவு சத்தியம்
ஒளித்துக் கிடக்கிறது.
அதற்காகவேனும் நான் உன்னை
நேசிப்புடன் அணைத்துக் கொள்ளலாம்.

"ம்" அது உன்னால் முடியுமென்பது
எனக்குத்தெரிகிறது.

*2019*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒற்றை மலர்

நான்
அடி மரத்தைத் தொட்டபோது
உச்சாணிக் கொம்பில்
ஒரு
பூ மலர்ந்தது!
பூவின் இதழ் ஓரம்
இளஞ் சிவப்பு.
உள் மடலில்
அடர் மஞ்சள்
புற மடலில்
ஊதா கலந்த
இள நீலம்.
இழைகளும்
மகரந்த கேசரமும்
மாற்றம் இல்லாத
மஞ்சள் நிறத்தில்.
குறியும் ஸ்தம்பமும்
மயக்கும் பொன் வண்ணம்!
குறியில்
லேசாய்த் தீற்றிய
சிவப்புடன்
சிறிது பச்சை வருடல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறியைத் தொட்ட படிக்கு
பட்டுப்போர்த்திய
சிறு பூச்சி;
சிறகை விரித்தபடி...
இது
என்ன இசைக்கிறது...?
காதல் ரசம் மிகுந்த
காமப் பாடலா...!

*2014*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

269805

## ஆசிரியரது சிறுகதைத் தொகுதிகள்

14049 CC

*மாற்றம்* - ***1980*** ஜூன்
உலா - ***1992*** ஜனவரி
சட்டநாதன் கதைகள் - ***1996*** ஜூலை
புதியவர்கள் - ***2006*** நவம்பர்
முக்கூடல் - ***2010*** பெப்ரவரி
பொழிவு - ***2016*** வைகாசி
தஞ்சம் - ***2018*** ஆனி

## ஆசிரியரது கவிதைத் தொகுதி

*நீரின் நிறம்* - ***2017*** ஆடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



க. சட்டநாதனின் "துயரம் தரும் அழகு" எனும் இக் கவிதைத்தொகுதி துயரந்தருகின்ற துயரத்துக்கப்பால் அதனுள் ஊறி வெளிப்படும் அழகை இரசிக்கிறது. துயரத்தை இரசனைக் குரியதாக்குகின்றது. தனிமையும் வெறுமையாகிப்போன வாழ்வுக்குக் கடந்தகால வாழ்வின் நினைவுகளினூடு ஒத்தடங்கள் கொடுத்து இசைமீட்டுகிறது. துயரிசையில் வழிந்தொழுகும் வாழ் வின் விளிம்பில் ஒட்டி யிருக்கும் நாட்களைக் கடந்து செல்ல மாய யதார்த்தத் தைப் பயன்படுத்துகிறது.

இத்தொகுதியில் ஐம்பது கவிதைகள் உள்ளன. இவரது சிறுகதைகள் போல் ஒற்றைச்சொல்லைத் தலைப்பாகக் கொண்டவையே அநேகம். சூனியப் பெருவெளியின் விரிவினுள் (ப. 79) கிடக்கும் தம் வாழ்வைக் கடந்தகால எண்ணங்களால் நிரப்பப் பல கவிதைகள் முயற்சிக்கின்றன. அகவுலக சஞ்சாரங்களைப் பெரிதும் நிகழ்த்துகின்றன. தம்முள் தாமே சம்பாஷிக்கின் றன. "எழுதித்தீராப் பக்கங்களாய்" ஓய்ந்து விடுகின்றன. மீண்டும் தம் நினைவு முடிச்சுக்களை அவிழ்த்து அவிழ்த்து இதம் தரும் வாழ்வியல் தடங்களைத் தேடித்தேடிக் கிடைத்தவற்றைக்கொண்டு தம்மை ஆசுவாசப்படுத்திக் கொள்கின்றன.

- தி.செல்வமனோகரன்

ISBN 978-955-4676-97-8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org